சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புக். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு ஆவணி மீ ௨ (1946 ஆகஸ்ட் 20 செவ்வாய்க்கிழமை) [இல நுகூ

# கட்சிபிரிந்து கருமம் செய்யவேண்டாம்!

## அரசாங்க உத்தியோகத்தர் கடமை

### அபிப்பிராயபேதத்தால் பகைமை வேண்டாம் அவரவர் கடமை; அவரவர் பொறுப்பு

### பயன் கருதாது கடமை புரிக

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**பரந்த மனப்பான்மை வேண்டும்**

ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம் என்றெல்லாம் நம்மவர் பகிரங்கக் கூட்டங்களிற் பேசுகிறார்கள். துண்டுப்பிரசுரங்கள் மூலமாகப் பிரசாரம் செய்துவருகிறார்கள். ஆனால் நடைமுறையில் இந்தப்பெரிய கொள்கைகள் யாவும் காற்றிற் பறந்துபோகின்றன. உலகிலே எல்லாரும் ஒரே விதமான அபிப்பிராயமுடையராயிருந்தால் உலகமே நடைபெறமாட்டாது என்பதை நாங்கள் உணரவேண்டும் எந்தவிஷயத்திலும் அபிப்பிராயபேதம் இருக்கத்தான் செய்யும். அதன்பொருட்டு நாம் மற்றவர்களைத் துவேஷிக்கவோ, இம்சிக்கவோகூடாது. ஜெர்மனி, இற்றலி, ஜப்பான் முதலிய நாடுகளிலேதான் சிலகாலமாக அதிகாரம் படைத்தவர்கள், அபிப்பிராயபேதத்துக்கு இடம் கொடுக்காமல், தம்முடன் மாறுபட்ட அபிப்பிராயங்கொண்டவர்களை இம்சித்து வந்தனர். கடைசியில் வாளை எடுத்தவன் வாளாலேயே மடிவன் என்றதற்கிணங்க, அந்த நாடுகளில் அதிகாரம் படைத்திருந்தவர்கள் அதோகதியடைந்தமை கண்கூடு. இந்தப்பெரிய படிப்பினையை நாம் மனத்துட் கொண்டு, நாம் எவ்வித அபிப்பிராயங் கொள்ள உரிமையுடையோமோ, அவ்விதமாகவே மற்றவர்களும் அதற்கு விரோதமான அபிப்பிராயம்கொள்ளவும்உரிமையுடையர் என்ற ஓர்பெரிய உண்மையை மனதுட்கொண்டுபரந்த நோக்கம் பூண்டு நடப்போமேயானால், இந்நாட்டிலே நிகழும் வேற்றுமைகளுக்கும், பிணக்குகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்ததுபோலாகும்

●

துர் அதிர்ஷ்டவசமாக இப்படியான பரந்த மனப்பான்மை நம்நாட்டில் இல்லை ஒருவர் ஓர் விஷயத்தில் அது அரசியல் விஷயத்திலாயினுமாக, சமய விஷயத்திலாயினுமாக மனப்பூர்வமான அபிப்பிராய பேதம் கொண்டிருப்பாரேயானால், அவர் ஓர்துரோகிஎன மதிக்கப்பட்டு அவர்க்கெதிராக என்னஎன்ன தீமைகள் விளைக்கவேண்டுமோ, அவற்றை விளைக்கச் சிலர் பின்வாங்குவதில்லை இவ்விஷயத்தில் நாது தலைவர்கள் என்று இருப்போர் பொது ஜனங்களுக்கு வேண்டிய போதனைகளைச் செய்து அவர்களுக்கு நன்மார்க்கம் காட்டுவதில் மிகவும் தவறி வருகிறார்கள் என்றே கூறவேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தில் ஹிந்துக்கள் ஓர் பெரும் பொறுப்பைத் தாங்கியவர்களாயுள்ளார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அன்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா குருக்ஷேத்திரத்திற் கூறியாங்கு, எது நேர்ந்தபோதிலும் நிஷ்காமியமாக எமக்கெமக்குரிய கர்மத்தை நியாயம், நீதி என்று காணும்வகையிற் செய்துவிட்டுப் பயனைப்பற்றி அணுத்துணையாவது கருதாது இருத்தல் வேண்டும்.

●

**இங்கேயும் இப்படிச் செய்தாலென்ன?**

இற்றைக்குச்சின்னாட்களுக்குமுன் நிகழ்ந்த பாஞ்சாலச் சட்டசபைத் தேர்தலின்போது அங்குள்ள சில அரசாங்க உத்தியோகத்தர் பக்கம் பிரிந்து, தாம்தாம் விரும்பிய அபேட்சகர்க்கு வாக்குச்சம்மதங்கள் சேர்த்தும், வேறுவிதமாக, இரகசியமாகவும், பரகசியமாகவும் முயற்சி செய்தனர். அரசாங்க உத்தியோகத்தராயுள்ளார், ஓர் கட்சியைச் சேர்ந்தவர்களின் பணத்தை மாத்திரம் சம்பளமாகப் பெறுபவர் அல்ல. கட்சிபேதம் இல்லாது ஊரவர் யாவரும் கொடுக்கும் வரிப்பணத்தில் இருந்தே அவர்களுக்கு வேதனம் உதவப்படுகிறது. அவர்கள் அரசாங்க ஊழியர். அவர்கள் எல்லார்க்கும் பொதுவாக இருக்கவேண்டியவர்கள். இப்படிப்பட்ட அவர்கள் கட்சிசேர்ந்து சென்றதேர்தலில் வேலை செய்தமைக்காக அவர்களிற் பலரை, இப்போது அமைக்கப்பட்டுள்ள பாஞ்சால மந்திரசபையினர் தண்டிக்க முற்பட்டு, பலர்க்கு உத்தியோக மாற்றம் அளித்துவிட்டனர். இன்னும் பலர் வேலையினின்றும் நீக்கப்பட்டுவிட்டனர், இது மிகவும் சிறந்த ஓர் முறையென்றே கருதுகிறோம், இந்த முறையை எங்கள் இலங்கையிலும் அனுட்டித்தல் சாலச் சிறந்தது. இப்போதே அரசாங்க சேவையில் உள்ள சில உத்தியோகத்தர், அவர்களிலும் விசேஷமாக டீ. ஆர். ஓ. என்னும் கிராமாதிகாரிகள், விதானைமார், உடையார்மார் என்னும் தலைமைக்காரர், ஐக்கியசங்கப் பரிசோதகர்கள், மதுப் பரிசோதகர்கள், முதலியோர் அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு ஆயத்தம் செய்து வருகின்றனர் என்று நம்பத்தகுந்த பல செய்திகள் கிடைக்கின்றன. இவ் விஷயத்தில் அரசாங்கம் மிகவும் கண்டிப்பான நடைவடிக்கைகளைக் கையாளவேண்டும். பொது ஜனங்களின் வரிப்பணத்தைச் சம்பளமாகப்பெற்று எல்லார்க்கும் ஒரேவிதமான நீதி செலுத்தி ஊழியஞ் செய்யவேண்டிய அரசாங்க உத்தியோகத்தர் கட்சிபிரிந்து பாராளுமன்றத் தேர்தல்களிற் பங்குபற்றினால்

## உத்தியோகத்தர்

### வேலைநிறுத்தம் செய்வராம்!

அரசாங்க உத்தியோகத்தர்க்கு வேதனம் அதிகரிக்க வேண்டும் என்ற திட்டத்தை அரசாங்கம் எக்காரணம் கொண்டாவது கைவிடுமானால், அந்த உத்தியோகத்தர் வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்திருக்கிறார்கள்! சென்ற ஜனவரிமாதமிருந்து தமக்கு வேதனம் புதிய திட்டத்தின்படி உயர்த்தவேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். இந்த வேலைநிறுத்தம் நடைபெறுமானால் புகைரதப் பகுதி, தபால் தந்திப்பகுதிகளில் உள்ள உத்தியோகத்தர் தம் கடமைகளை ஆற்ற மறுப்பர். நாட்டின் போக்குவரவு அப்படியே ஸ்தம்பித்து விடும்.

அரசாங்கக் காரியாலயங்களிற் கடமை பார்க்கும் கிளெறிக்கல் உத்தியோகத்தர், தத்தமக்குரிய காரியாலயங்களுக்குப் போவர் ஆனால் போய் சும்மா இருப்பரேயன்றி வேலை செய்ய மாட்டார்களாம்.

இப்படியான ஓர் வேலைநிறுத்தம் நிகழ்ந்தால் 120,000 உத்தியோகத்தர் பாதிக்கப்படுவர் என்று கூறப்படுகிறது.

## துணிகள் உண்டு

### ஆனால் இறக்குமதி செய்வதிற் கஷ்டங்கள்

இதுவரை இலங்கைக்குத் துணிகள் அனுப்பாமலிருந்த சில தேசங்கள் இப்பொழுது ஏராளமான துணிகளை அனுப்பத் தயாராயிருக்கின்றனவாம். உதாரணமாக பல்லாயிரக் கணக்கான கஜம் துணிகளை அனுப்புவதாக மெக்ஸிகோவிலுள்ள சில வியாபாரிகள் இலங்கை துணி வியாபாரிகளுக்கு எழுதியிருக்கிறார்கள்.

இலங்கை வியாபாரிகள் மெக்ஸிகோ துணியை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே இறக்குமதி செய்ய முடியுமென்று சொல்லுவதாகத் தெரிகிறது. உதாரணமாக இலங்கையில் விற்பனை செய்ய முடியாத துணிகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் துணிக் கட்டுப்பாட்டு அதிகாரி அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், இவ்விஷயத்தில் அவர் உறுதிகூறுதவரை மெக்ஸிகோ துணியை இறக்குமதி செய்வதற்கில்லையென்றும் உள்ளூர் வியாபாரிகள் சொல்லுகிறார்கள்.

குறிப்பிட்ட புடைவைகள் உண்மையாகவே இலங்கையில் விற்பனையாகவில்லையென்பது ருசுவானால் அந்தத் துணிகளை இங்கிருந்து புறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதில் துணிக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் ஆட்சேபனையிருக்காதென்று அறியப்படுகிறது.

## மிகப்பிழையானவேலை

### அரசாங்கசபையங்கத்தவராயிருந்துகொண்டு அரசாங்க உத்தியோகம் வகிக்கலாமா?

### தென் இலங்கையில் நிகழ்ந்துள்ள சம்பவம்

ஓர் அரசாங்கசபை அங்கத்தவர், அரசினரால் நடாத்தப்படும் பால் நிலையங்களின் அதிகாரியாகக் கடமை பார்க்கலாமா?

உணவுப்பகுதிக்குரிய கணக்குச் சம்பந்தமான விஷயங்களை. இதற்கெனவுள்ள சபையினர் சென்றவாரம் ஆராய்ந்தபோது மேலே காட்டிய கேள்வி கிளப்பப்பட்டது.

அரசாங்க சபையின் அங்கத்தவராயுள்ள ஒருவர், தென் இலங்கையில் அரசினரால் நடாத்தப்படும் பால்நிலையங்களுக்கு மேற்பார்வையாளராக அரசினரால் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை உணவுப் பகுதிப் பிரதம அதிகாரி ஸ்ரீ வைத்தியநாதன் ஒத்துக்கொண்டார். ஆனால் இந்த அங்கத்தவர்க்கு வேதனம் எதுவும் கொடுக்கப்பட்டதில்லைஎனக்கூறினார்

குறித்த சபையின் அங்கத்தவருள் ஒருவரான மிஸ்ரர் தகநாயக்கா, ஸ்ரீ வைத்தியநாதனை நோக்கி, "இப்படியான கீழ்த்தரமான, கேவலமான, ஊழல் விளைக்கும் பரிபாலன முறையை எங்கும் கண்டதில்லை என்று கூறினார். இன்னோர் அங்கத்தவரான ஸ்ரீ நல்லையா, இது மிகவும் ஒழுங்கீனமானதென்றுகுறிப்பிட்டார்

ஈற்றில் ஓர் அரசாங்கசபையங்கத்தவர் இப்படியான ஓர் அரசாங்க வேலையில் ஈடுபடவிட்டது பெரும் பிழை என்று, இந்தக் கணக்குகளைப் பரிசோதனைசெய்த சபையினர் தீர்மானித்து, இவ் விஷயத்தை அரசாங்க சபைக்குஅறிவிக்க முடிவு செய்தனர்.

## என்ன முடிவு!

### சம்பளத்திட்டம் மாற்றப்படுமா?

வரவு செலவுத்திட்டம் இரண்டாம் முறையாக நிறைவேறிவிட்டது. ஆனால் இலங்கையின் பண நிலைமை எப்படியாக முடியும் என்பது மந்திரசபையினர்க்கே தெரியாதாம். சேர். ஒலிவர் குணத்திலக லண்டனில் நடத்தும் சம்பாஷணைகளின் முடிவைப் பொறுத்தே இவ்விஷயத்தைப் பற்றி முடிவு கட்டலாம் சேர் குணத்திலகாவின் முடிவு வருகிற செப்டெம்பர் மாதம் 3ந் திகதி வரையில்தான் தெரியும் எனவே, வரவுசெலவுத்திட்டம் அரசாங்க சபையினால், நிருவாக முறைப்படி பரிசிலனை செய்வது செப்டம்பர் மாதம் 3ந் திகதி வரைக்கும் தவணையிடப்பட்டிருக்கிறது. சேர் ஒலிவரின் முயற்சி பயன் தராதுபோனால், முழு வரவு செலவுத் திட்டமும் புதிதாக அமைக்கப்படவேண்டி ஏற்படவும் கூடும். அது மாத்திரமல்ல, அரசாங்க உத்தியோகத்தர், ஆசிரியர் என்பவர்களுக்கான புதிய வேதனத் திட்டமும் கைவிடப்படக்கூடும் என்று மிஸ்ரர் சேனநாயக்கா சென்றவாரம் அரசாங்க சபையிற் கூறினர்

ஆபத்து நிகழும் என்பதை அவர்களுக்குப் பட்டவர்த்தனமாக அரசாங்கம் தெரிவிக்கவேண்டிய காலம் சமீபித்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞு
ஆவணிமீ ௪௨ செவ்வாய்க்கிழமை

## நல்லைக் கந்தனை வந்தனை செய்க

முண்டக மலர்ந்த தென்ன
மூவிரு முகமுங் கண்ணும்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரமீ ராறும்
இலங்கெழிற் படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ்
சரண்முந் தெரியக் கண்டான்.

எவன் கண்டான்? சூரபன்மன்; எப்படிக் கண்டான்; தெரியக் கண்டான்; கண்டால் தெரியுந்தானே, அப்படியானல் தெரியக் காண்பதென்றதென்ன? முருகையா! நீ உன் திருக்கோலத்தைக் காட்டினலன்றி, "அன்னவன் தவத்தின் பேற்றை ஆர் அறிந் துரைக்க வல்லார்" என்று கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளால் விதந்து பாடப்பட்ட அந்தச் சூரபன்மனுக, வேறெந்தத் தேவர்களாக, முனிவர்களாக, ஞானிகளாக எவர்களால் முடியும்? உன் திருக்கோலத்தைக் காணமுடியாது; "சூரனுக்கு நானே என் வடிவத்தை உள்ளவாறு தெரியக் காட்டியதை, பத்தி யென்பது எள்ளளவு மில்லாத நீ எப்படியறிவாய்" என்றுகந்தக் கடவுளே! நீ கேட்பின், உன்னருளாலே உன்கதை சொல்ல வந்த கச்சியப்பனே:

"பொருசமர் விளைப்பான் போலப்
பொருக்கெனப் போந்து சூரன்
இருவிழி தன்னிற் காண்பான்
எளிதுதன் வடிவங் காட்டி
அருளது புரிந்தான்......"

என்று பாடி யிருப்பதைப் படித்தேனென்பேன்; அன்றியும், வேலவா! உனது அநுபூதி பெற்ற அருணகிரியாரும், உன்னுடைய அருளின்றி உன்னை வணங்கல் முடியாதென்ற கருத்துப்பட "அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும் அவிழ்ந்த அன்பாற்-குராப்புனை தண்டையந்தாள் தொழல்வேண்டும்" எனப் பாடியிருக்கின்றரே, உன்னருளின்றி உன்னை வணங்க முடியாது.

ஐயா, முருகையா, பன்னிருகையா, மெய்யர்க்கு மெய்யா! உன்னருளாலே உன்னை வணங்கவேணும், வணங்குவதற்கு உன்னருள் வேணும் என்றல், இது எப்படி நடப்பது? ஒரு செயல் காரணமாகவும், மற்றச் செயல் காரியமாகவு மிருந்தால் ஒன்றைச் செய்ய இயலும், மற்றையதை அடைய முடியும்; இரண்டும் ஒன்றுக் கொன்று காரணமாயிருந்தால், காரியத்தைப் பெறுவதெப்படி? பெறுவதும் முடியும். இதற்கொரு உபாயமுண்டு; நீ சாந்நித்தியமாகக் கோயில் கொண்டருளிய கதிர்காமத்திற்க க, மாவிட்டபுரத்திற்காக,தொண்டைமானற்றூரத்திலுள்ள உன் செல்வச் சந்நிதிக்காக, இந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்காக, உன்னைப் பத்தியோடும் நியமத்தோடும் தரிசிக்க வரும் அன்பர்கூட்டத்தினர் செல்வதைப் பார்த்து நானும் மெய்யென் றிருக்கும் இந்த ஊத்தைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை இழுத்துக் கொண்டு சேர்ந்து நடந்து உன் சந்நிதானத்திற்கு வந்து விட்டால், பிறகு, அறுமுகங் கொண்ட அமலா, நான் உன்னை விட்டாலும் நீ என்னைத் தப்ப விடமாட்டா யென்பது நிசம்; கலியுக வரதா! இந்த இரகசியத்தை அறியாமலா பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் உனக்குப் பெருந்திருவிழா நடக்குங் காலமாகிய இந்த ஆவணி மாசத்திலே உன் சந்நிதியைத் தேடி நடந்தும், அங்கப் பிரதக்கணமென்று சொல்லப்படும் தேகத்தினல் தெருவழியே யுருண்டும் உன் திருக்கோயிலை அடைகின்றர்கள்! தாய்ப் பூனையானது, தன் குட்டிகள் தாயாகியதன்னை அலட்சியஞ் செய்து கிடந்த இடத்திலேயே கிடப்பினும், அவைகளை ஒவ்வொன்றாகக் கௌவிக் கொண்டுபோய்ப் பாதுகாப்பான இடத்திற் சேர்ப்பது போல, நீயும் ஆன்மாக்களை வலிய வந்து ஆட்கொள்ளும் புண்ணியமூர்த்தியல்லையோ! இந்த உண்மையை உணர்ந்தன்றோ "வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே" என்று அருணகிரியார் பாடினர்.

நேற்றைப் பாலனென்றும், எயிறுதோன்றச் சிறுவனென்றும் உன்னை அவமதித்து உன்னுடன் சமர் பொரும்படி உன் முன்னிலையில் வந்த சூரபன்மனைப் பரிபக்குவப்படுத்தி ஆட்கொண்ட கருணைத் தடங்கடலாகிய நீ, உன் அடியார் உன் சந்நிதிக்கு வருவதைக் கண்டு கூடிக்கொண்டு வரும் பொறியிலியாகிய என்னைப் புறக்கணிக்கமாட்டா யென்பதை நான் அறிவேன்; அப்படி "நான் செய்தேனென்று உனக்குச் சொன்னவன் எவன்" என்று கேட்கின்றயா? அந்த உண்மையையும் உன் கதையைப் பாடிய கச்சியப்பன் மூலமாகத்தான் அறிந்தேன்; எப்படி?

"தீயவை புரிந்தாரேனும்
குமரவேள் திருமுனுற்றல்
தூயவராகி மேலைத்
தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ!
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனுமன்றே!
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்"

ஆதலால், நல்லைக் கந்தா அரனர் மைந்தா! உன்னைப் பக்தியுடன் பணிவார்க்கு உய்தியுண்டு; அங்ஙனஞ் செய்தலை விடுத்து "உன்னை யுணர்ந்திங் குனைப் பூசியாத உலுத்த ரெல்லாம் - என்ன இருந்து கண்டார்".

*

## வெள்ளவத்தை இசைக்கலை மன்றம்

வெள்ளவத்தையிலே, திரு. K. கனகரத்தினம்முதலிய சைவாபிமானிகளாற் சில காலத்திற்கு முன் இசையை வளர்க்கும் நோக்கமாகத் தொடங்கி நடத்தப்பெற்று வரும், இசைக்கலைமன்றம் இறைவன் திருவுளத்தையும் உருகச்செய்யும் இயல்புடையதாகிய இசையை இனியமுறையில் வளர்க்கத்தொடங்கியிருக்கின்றது; இசையபிமானங் கொண்டாரெவரும் இம்மன்ற வளர்ச்சியை யிட்டுத் தம்மால்இயன்ற உதவி செய்தலே முறைபாகும்; இந்த இசைக்கலைமன்றத்தில் தேவாரம் திருப்புகழ் முதலாம்அருட்பாக்களைப் பண்ணேடும் சுரத்தோடும் இசைமுறையில் தமிழ்ச் சிறுமியர்க்குச் சொல்லிக் கொடுக்குங் கடமையைச் சமயோசிதமாக, தென்கன்னடம் ஜில்லா, கஞ்சன்காடு ஆநந்தாச்சிரமத்தைச்சேர்ந்த ஸ்ரீ முருகதாஸ் என்னும் சைவத் துறவி செய்து வருகின்றர். இந்தஅன்பர் தாம் இசை பயிற்றிவரும் சைவச் சிறுமியருடன் திருப்புகழ் முதலாம் அருட் பிரபந்தங்களைக் கன்னுமிர்தமாசப் பாராயணஞ் செய்தமையை, இவ்விஷயத்தைமுழுதும் நாம் சில வாரங்கட்குமுன் நேரிற் கேட்க வேளை வாய்த்தது; நம் சைவத் தமிழ்ப் பெண்கள் பயிலவேண்டிய முறையான சங்கீதம் இதுவே யென்பது எம் அபிப்பிராயம் ஸ்ரீ முருகதாஸ் அவர்கள் தம் மாணவியர்களுடன யாழ்ப்பாணத்திற்கும் வந்து நல்லூர்க் கந்தசுவாமிகோவிலிலும் இன்னுஞ் சில தானங்களிலும் இசையோடுகூடிய பிரசங்கங்களைச் செய்வார்களென அறியலானேம்: ஆதலின் இங்குள்ள ஆண்பாலார் பெண்பாலாராகிய சைவ மக்களும் ஏனையோரும் பத்திரசம் பெருக மேற்படிதாசர் செய்யும் இசைப் பாக்களைத் தவறுதுகேட்டு இறைவன் மேல் பற்றுவைத்து ஈடேறுவார்களாக.

---

### சீயம் அரசரின் இலங்கை விஜயம்

சீயம் தேசத்து அரசர் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

## கட்டுப்பாடு ஒழிக

இலங்கையிலே அரசாங்கம் விதித்திருக்கும் கட்டுப்பாடுகளே இந்நாட்டின் கேவல நிலைக்குக் காரணமாதலால் அவற்றை நீக்கவேண்டும்என்று லங்கா சுயராஜ்யக்கட்சி தீர்மானித்து அரசாங்க சபைக்கு ஓர் மநுவைச் சமர்ப்பித்திருக்கிறது.

---

## பிரதான அறிவித்தல்

"செக்"குகள், 'மனிஓடர்", "போஸ்ரல் ஓடர்" முதலியன இந்துசாதனம் மானேஜர்க்கே அனுப்பப்படவேண்டும் என்பதை சந்தாதார் முதலியோர்க்கு அறிவித்துக்கொள்கிறேம்.

மானேஜர்
இந்துசாதனம்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

---

## தானவரவு

வண். மேற்கு திரு. சொக்கலிங்கம் கந்தப்பசேசர உபாத்தியாயரின் அபரக் கிரியையில் அவருடைய புதல்வராகிய திரு இரத்தினசபாபதி அவர்களால் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 5 பெற்றேம்.

மானேஜர்

---

## விற்பனைக்கு இருக்கிறது

மோறிஸ் 8: 4 கதவு சலூன்கார் வழிந்த கூடாரம், இல Z 4994. சொந்தக்காரரே செலுத்தி மிகவும் கவனமாகப் பாவிக்கப்பட்டது.

டக்ரர் பர்ணண்டோ
ஆஸ்பத்திரி
யாழ்ப்பாணம்.

Mis 151. 20—23-8 46

---

# ஃ குறிப்புக்கள் ஃ

### நல்ல முன்மாதிரி

கொக்குவில் இளைஞர் சங்கம் இப்போது சில காலமாக, எங்கள் நாட்டுக்கும் சைவசமயத்துக்கும், எம் தமிழ்மொழிக்கும் நல்ல முறையிற் பணிசெய்ய முன் வந்திருப்பதைச் சைவாபிமானிகள் எல்லாரும்பாராட்டவேவேண்டும். எங்கள் மெய்ச்சமயத்தை உலகுக்கு அறிவித்து மங்காப் புகழடைந்த அறுபத்துமூன்றுநாயன்மாரது குருபூசைகளைக் காலந்தோறும் செய்ய, இச்சங்கத்தினர் நிச்சயித்திருக்கிறர்கள், அக் குருபூசைத் தினங்களில், மக்களுக்கு அறிவூட்டத் தக்க உபந்நியாசங்களும் நடாத்தப்படுகின்றன. நமதுமக்களை, கேவலம் கட்சிப்பூசல்களில் ஈடுபடுத்திப் பரஸ்பரம் பகை, குரோதம் என்பவற்றை அவர்களுக்கிடையேபுகுத்த ஓர்சிலர் கங்கணங்கட்டி முயற்சி செய்யும் இந்தக் காலத்திலே, சமரசம், அன்பு, சன்மார்க்கம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட இந்த மகத்தான பணியை மேற்கொண்டுள்ள கொக்குவில் இளைஞர் சங்கத்தாரை நாம் பாராட்டுகிறேம். எங்கள் சைவம் ஓர் பெரிய நிழல்தரும் விருட்சம், அதன் குளிர்தரு நிழலில் தங்கி ஆநந்தமடையச் சேரவாரும் செகத்தீரே என்று அழைக்கும் இந்தச் சங்கத்தாருடன் சேர்ந்து ஒத்துழைப்பது சைவமக்கள் ஒவ்வொருவரதும கடமையாகும் கொக்குவில் இளைஞர்சங்கம் வாழ்க; அது கொண்டுள்ள சிறந்த முயற்சிகள் சித்திபெறுக.

○

### சண்டித்தனமா?

கேவலம் 10கோடியினராகிய முஸ்லீம்கள் 30 கோடி ஹிந்துக்களையும் சீக்கியரையும் ஏனைய வகுப்பினரையும் அடக்கியாள நினைத்து, தம் கைவரிசைகளையும், மதவெறியை ஆதாரமாகக்கொண்ட "காடை"த்தனத்தையுங்காட்ட, வங்காளத்தில் உள்ள கல்கத்தா நகரத்தில் முன்வந்துவிட்டனர் இந்த முஸ்லிம்லீக் "காடை"யர் செய்துள்ள "காடை"த் தனத்தால் 2000 பேர்வரை மரணமடைந்தனர் என்றும், 2000 பேர்வரைகாயமுற்றனர்என்றும் அறியலானேம் இந்தக் கொலைக்கும், ஆபத்துக்களுக்கும் மூலகாரணர் யார்? முஸ்லிம்லீக் தலைவர்களென்பதை எவரும் மறுக்க முடியாது கேவலம் ஏழை மக்கள், கல்வி வாசனையற்றவர்கள் மத்தியில அவர்களுக்கு ஆவேசம் ஊட்டும் பேச்சுக்களைக் கக்கிவிட்டு. இந்தத் தலைவர்கள் தங்கள்மாடமாளிகைகளில் பாதுகாப்புடனிருக்கிறர்கள் இவர்களின் நஞ்சு மொழிகளைக் கேட்டு அந்நஞ்சு தலைக்கேறியதன் பயனுகப் பாமர ஜனங்களில் 300 பேர் மரணமடைந்தனர். சமரசம், சகோதரத்துவம் என்பவற்றைப் போதித்தவர் மகமதுநபி; ஆனல் அவ நடையர்சீஷர் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளுபவர் இன்று விஷத்தைக் கக்குகின்றனர். ஆனல் இவர்களுடைய விஷம் அந்த ஆலகால விஷத்தையே ஆன்மாக்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு உண்டு என்றும் நீலகண்டனுய் விளங்கும் அந்தப் பரம்பொருளைத் துதிக்கும் ஹிந்துக்களை ஒன்றும் செய்யமாட்டாது என்பதை இந்த முஸ்லிம் லீக்'காடை'யர்க்குப் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்க விரும்புகிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

## ஒற்றுமையின்றேல் அனைவர்க்கும் தாழ்வு — தமிழர் மகாநாட்டு வரவேற்புரை

### ஸ்ரீமான் குலசிங்கத்தின் வேண்டுகோள்

(நமது நிருபர்)

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு: ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு: தமிழ்மக்களுக்கு இப்பொழுது நேர்ந்துள்ள நெருக்கடியான காலத்தில், அவர்கள் ஜாதிமத பேதமின்றி, எல்லாரும் ஒற்றுமை பூண்டு ஒரேகொள்கை, ஒரே லட்சியம் கொண்டு கருமம் ஆற்றினால்தான் இச் சமூகத்துக்கு எதிர்காலத்திற் சுபீட்சம் ஏற்படும்"

இவ்வாறு அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டின் வரவேற்புச்சபைத் தலைவராகிய ஸ்ரீமாந். ஐ. வ. குலசிங்கம் அவர்கள், சென்ற சனிக்கிழமை நிகழ்ந்தமகாநாட்டில் தமது வரவேற்புப் பிரசாரணத்திற் கூறினர்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி தமிழர் மகாநாட்டின் இரண்டாவது வருடாந்தக்கூட்டம், யாழ்ப்பாணம் நகரசபை முன்றிலில் சென்ற சனிக்கிழமை கூடியது. தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும், மற்றும் மகாநாட்டுப் பிரமுகர்களும் யாழ்ப்பாண நகரத்தின் பிரதான தெருக்கள் வழியாக ஊர்வலத்தில், மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்து வரப்பட்டனர். மகாநாட்டுக்கு யாழ்ப்பாணம் எங்கணும் இருந்து 3000 ஜனங்கள்வரை சமுகமாயிருந்தனர்.]

வரவேற்புரைத் தலைவர் நியாயவாதி ஸ்ரீமாந் ஐ. வ குலசிங்கம் அவர்களின் வரவேற்புரையுடன் மகாநாடு ஆரம்பமாகியது. ஸ்ரீமாந் குலசிங்கம் தமது வரவேற்புப்பிரசங்கத்திற் கூறியதாவது:-

"இத் தமிழர் மகாநாடு ஓர் வகுப்புவாத ஸ்தாபனம் என்றும், சிங்களர்க்கு விரோதமாக ஆக்கப்பட்ட ஓர் ஸ்தாபனம் என்றும் ஓர் சிலர் கூறித்திரிகின்றனர். இது முற்றிலும் பிழையானது என்பதை இங்கே வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன் இந்த இலங்கையானது, சிங்களர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் எனும் பல சமூகத்தினர்க்கும் தாயகமாயுள்ளது இந்தச் சமூகத்தார் அனைவரும் ஒத்துழைத்தால்தான் எங்கள் நாடு முன்னேற்றமடையும். பூரண சுயராச்சியம் என்னும் லட்சியத்தை எங்கள் நாடு அடைந்து, உலக சாம்ராஜ்யத்தில் தனது கடமையைச் செவ்வனே இந்த இலங்கை செய்தற்கு, எங்கள் எல்லாரதும் ஒற்றுமை மிகவும் இன்றியமையாதது. இதனை இத் தமிழர் மகாநாடு நன்குக உணர்கிறது. இந்த நாட்டின் முன்னேற்ற விஷயத்தில் தமிழ் மக்களாயுள்ளார், மற்றெவர்க்கும் பின்னிற்பவரல்லர். நாங்கள் மற்றும் சமூகத்தாருடன் ஒத்துழைப்போம். ஆனால், அப்படி மற்றவர்களுடன் ஒத்துழைத்து நாட்டின் முன்னேற்ற விஷயத்துக்கு உழைக்க முயலுமுன், நாம் எமக்குள்ளே முதவில் ஒற்றுமை கொண்டிருக்கவேண்டும். தமிழ்ச் சமூகத்தாராகிய நாம் ஒற்றுமை கொள்ளாவிட்டால், ஒருபோதும் முன்னேற முடியாது. நாம ஒற்றுமை பூண்டு, வருகிற பாராளுமன்றத் தேர்தலில் ஓர் கட்சியாக நின்று கடமையாற்றுவோமானால், நாம் எம்முடைய லட்சியத்தைச் சரிவரச் சாதிக்க முடியும். நாம் கட்டுப்பாட்டுக் கமைய வேண்டும். இந்தக் கட்டுப்பாட்டையும், ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு நாம் எல்லாரும் இந்தத் தமிழர் மகாநாட்டுக் கொடியின்கீழ் நின்று தொண்டாற்றுவோமாக இந்த மகாநாடு, ஒருவர் இருவருடைய சொந்த ஸ்தாபனம் அல்ல. இதில் எல்லாத் தமிழ்மக்களுக்கும் இடமுண்டு நாங்கள் எமக்குள்ளே ஒற்றுமை கொள்ளுவோம். அந்த ஒற்றுமை மூலமாகப் பலம் கொள்ளுவோம். இலங்கையின் மற்றெல்லாச் சமூகத்தினருடனும் ஒத்துழைப்போம். நாட்டின் முன்னேற்றத்திற் பங்கு பற்றுவோம்.

இதன்பின் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ ஜி.ஜி, பொன்னம்பலம், இப்போது தமிழ்மக்களது அரசியல் விவமான கேவலநிலைக்கு மூலகாரணர் எங்களுடைய பிரதிநிதிகளே என்று கண்டித்தார்.

மகாநாட்டில் 12 தீர்மானங்கள் நிறைவேறின. இலங்கைக்குப் பூரண சுயராச்சியம் பெறுவதில் ஏனைய சமூகத்தினருடன் ஒத்துழைத்தல், தமிழர் மகாநாட்டில் எல்லாத் தமிழ்மக்களும் ஒற்றுமை பூண்டு சேரவேண்டியதன் அவசியம், இலங்கைக்கு இப்போது அளிக்கப்பட்டுள்ள அரசியல் நிர்மாணம் நாசமானது என்பதை வற்புறுத்தல், இந்திய மக்களுக்கு அவர்கள் இலங்கையில் 5 வருஷ காலம் வாழ்ந்து இங்கேயே குடியிருக்க விரும்பினல் பூரண பிரஜா உரிமைகள் வழங்க வேண்டும் என்பதைக் கேட்டல், தமிழ்ப் பாஷையை அரசாங்கபாஷைகளில் ஒன்றாக்க வேண்டும் என்று வற்புறுத்தல், பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசக் கல்வியுடன், இலவசமாகப் புத்தகங்கள், உபகரணங்கள், ஊண்,உடை என்பனவும் கொடுக்கவேண்டும் என்று கேட்டல், விவசாய விருத்திக்கான கருமங்களை அரசாங்கம் செய்யவேண்டும் எனக் கோருதல், வடமாகாணம் கிழ்மாகாணம் என்பவற்றில்உள்ள துறைமுகங்களைப் போக்குவரத்துக்குத் திறக்க வேண்டும் எனல், வேலையில்லாக் காலத்தில் மக்களுக்குச் சகாயம் செய்ய வேண்டும் எனல், அரசினர்கலாசாலைகளைப்போல நடாத்தப்பட்டுவரும்நன்கொடைக் கலாசாலைகளுக்கும் வேண்டிய உதவிகள் அனைத்தையும் அரசினர் தொடர்ந்துசெய்து பாதுகாக்க வேண்டும் எனல் இவையே அன்று நிறைவேறிய தீர்மானங்களிற் பிரதானமானவை,

### வலிகாமம் கிழக்குப் பகுதித் தமிழாசிரியர் சங்கப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டமானது 8-8-46 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. க ஜெயக்கொடி (Advocate) அவர்கள் தலைவராயமர ஆரம்பமானது.

சென்றகூட்ட வரலாறு வாசிக்கப்பட்டு அங்கீகாரமாயதும் தலைவர் முன்னுரையாக ஆசிரியத் தொழிலின் மகத்துவமும் ஒற்றுமையும் என்பதுபற்றிப் பேசியபின் தொழிலாளர் சங்கம் என்பதுபற்றி திரு A. வைத்தியலிங்கம் அவர்களும் கவியின்பம் என்பதுபற்றி வித்துவான் திரு. க. கார்த்திகேயன் B. A. அவர்களும் விரிவுரையாற்றியபின் திரு. பொ. ஜெகநாதன் ஆசிரியர் அவர்களால் நன்றியுரை கூறப்பட கூட்டம் இனிது நிறைவேறியது.

# 4 லட்சம் ரூபா

## பெறுமதியான துணிஎங்கே?

அரசாங்க ஐக்கியசங்கப் பகுதியார் மொத்த விற்பனைப் பொருட்சாலை என ஓர் ஸ்தாபனத்தை வைத்திருக்கிறார்கள். உற்பத்தியாளரிடம் இருந்தோ, அல்லது தானே இறக்குமதி செய்தோ அரசாங்கம் பல பொருள்களை இப் பண்டகசாலையில் வைத்து ஐக்கியசங்கக் கடைகளுக்கு விநியோகம் செய்யும்,

இந்த மொத்த விற்பனைப் பண்டகசாலையில் பாரதூரமான பிழைகள் நேர்ந்திருப்பதாகக் கணக்குப் பரிசோதனை அதிகாரி இப்போது தாம் வெளியிட்டிருக்கும் வருடாந்தப் பரிபாலன அறிக்கையிற் குறிப்பிடுகிறார்

குறித்த மொத்த விற்பனவுச் சாலையின் 1944ம் ஆண்டு தொடக்கம் 1945ம் ஆண்டு வரையுள்ள வரவு செலவுக் கணக்கு இன்னும் முடிக்கப்படவில்லை என்றும் குறித்த ஆண்டிலே ரூபா 112,149 பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போய்விட்டது என்றும் கணக்குப் பரிசோதனை அதிகாரி குறிப்பிடுகிறார். இந்தத் திருட்டுக்களைவிட குறித்த பண்டகசாலையிலே பெருந்தொகையான பொருள்களையும் சொல்லப்பட்ட ஆண்டிலே காணவில்லையாம்.

1944ம் ஆண்டு செப்டெம்பர்மாதம் முடிய மாத்திரம் 4 லட்சம் ரூபா பெறுமதியான துணிகள் அப் பண்டகசாலையிலிருந்து மாயமாகமறைந்தனவாம்.

# பன்னைக் கைத்தொழில்

(மு. சுவாமிநாதன், கோப்பாய்)

கோப்பாய் மத்திய சைவ வித்தியாசாலையின் சமீபமாகவுள்ள நாவலடி என்னுமிடத்தில் பன்னக் கைத்தொழில் வேலை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு. பன்னத் தொழிலில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவரால், உபயோகத்திற்குரியனவும் உயர்ந்த பெறுமதியுடையனவுமாகிய பொருள்கள் செய்விக்கப்படுகின்றன. பன்னவேலை ஐந்தாம்பிரிவிற் சித்திபெய்தியவர்களும்பள்ளிக்கூடத்திற் பன்னப் பயிற்சி பெறாத பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பன்னத் தொழில் வல்லுநரும் இதிற் சேரலாம். பனையோலை வேலை மாத்திரமன்றி, தாழையோலை, புல், ஈச்சோலை வேலை ஆதியனவும் இங்கு சிறந்தமுறையிற் பயிற்றுவிக்கப்படும். இவ்வேலை நிலையத்தின் பிரதான நோக்கம்: இதிற் சேர்ந்த ஒவ்வொருவரும் தம்மாற் கூடுமானவரை எவ்வளவு பொருள்களைச் செய்யக்கூடுமோ, அவ்வளவையுஞ் செய்வித்து வியாபார சங்கத்தின் மூலம் பிறதேசங்களுக்கனுப்பி, அதனால் வரும் லாபத்தை அவ்வப் பொருள் செய்தவர்க்களிப்பதாம். பொருள்களின் பெறுமதியில 60 வீதத்திற்குக் குறையாத பணம் வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் நுட்பமாகவும் விரைவாகவும் பன்னும் பயிற்சியுள்ளவர்கள் மாதம் இருபத்தைந்து, முப்பது ரூபாவிற்குக் குறையாத ஊதியம் பெறுவர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# 60000 பேர் பட்டினி!

## அரசாங்கமும் ஐக்கியசங்கமும் போட்டி இடையில் நிற்கும் மக்கள் பட்டினி!

### மூடைகளில் எப்படி நெல் குறைகிறது?

(நமது நிருபர்)

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் வசிப்பவர்களில் 60000-க்கு மேற்பட்டவர்கள், ஐக்கியசங்கக் கடைகளிலேயே தமக்குரிய உணவுப்பொருள்களைப் பெறுபவராவர். இந்த 60000 பேரும் இந்தவாரம், அரைவயிற்றுக்காகவாவது உண்பதா? அல்லது உபவாசம் இருப்பதா? என்ற ஓர் பிரச்சினை இப்போது கிளம்பியிருக்கிறது

சங்கக் கடைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை கொடுப்பது இவை எல்லாவற்றையும் கொண்ட ஓர் ஐக்கிய ஸ்தாபனம் இந்த ஐக்கிய ஸ்தாபனம், தன்கீழ் உள்ள கடைகளுக்குத் தேவையான நெல்லை, அரசாங்கத்திடம் இருந்துவாங்க மறுத்துவிட்டது. காரணம்:—

இப்போது சிலகாலமாக, அரசாங்கத்திடம் இருந்து பெறும் நெல் மூடைகளில் அளவுக் குறைவு ஏற்பட்டு வருகிறதாம். சென்றவாரம். அரசாங்க நிலையத்திலிருந்த நெல் மூடைகள் பத்தைப் பரிசோதனைக்காகக்கொட்டி அளந்துபார்த்தபோது சராசரியாக ஒவ்வொருமூடையிலும் நாலுபடி நெல்லுவரை குறைந்திருக்கக் காணப்பட்டதாம். இப்படிப்பட்ட நெல் மூடைகளை நாம் வாங்கி ஐக்கிய சங்கக் கடைகளுக்கு அனுப்பினால் யாருக்கு நட்டம்? ஊரவர்க்கும்; சங்கக் கடைகளுக்குமேயாம். ஆகவே, அரசாங்கம், ஒன்றில்எங்கள் சமுகத்தில் மூடைகளை அவிழ்த்துக் கொட்டியளந்துதரவேண்டும், அல்லது நாம் கேட்கும் குறைவு நெல்லைத்தரவேண்டும் என்று மேற்படி ஐக்கிய ஸ்தாபனம் அரசாங்கத்தைக் கேட்கிறது.

உணவுக் கட்டுப்பாட்டு விஷயமாக இப்பகுதியில் அதிகாரியாயுள்ள ஸ்ரீமாந் ஸ்ரீகாந்தா அவர்கள் இப்படிக் குறையும் மூடைகளில் 100-க்கு 10 விகிதத்துக்குமாத்திரம் தாம்ஈடுசெய்யமுடியும் என்றும், அதற்குமேல் ஈடு செய்யத் தமக்குஅதிகாரமில்லைஎன்றும் கூறுகிறார். முழுவதுக்கும் ஈடு தரவேண்டும் என்று ஐக்கிய ஸ்தாபன அதிகாரிகள் கண்டிப்பாக நிற்கின்றனர். அவர்கள் இந்த வாரத்துக்குரிய நெல்லை இன்னும் பெறவில்லை. இதன்பயனாக இச்சங்கக்கடைகளில் நேர்ந்துள்ள 60000 மக்கள் உண்ண உணவின்றித் தவிக்கிறார்கள்.

ஐக்கிய ஸ்தாபனப் பகுதியார் தம் கோரிக்கையைப் பூர்த்தியாக்குவதில் உறுதியாக நிற்கின்றனர். அரசாங்கமும் ஐக்கியப் பகுதியாரும் எதிரிடைகட்டிக்கொண்டு நிற்க, ஊரவர் பட்டினியாய்க் கிடக்கிறார்கள். "ஆரொடு நோவோம்! ஆர்க்கெடுத் துரைப்போம்: ஆளும் நீர் இப்படிச் செய்தால்" என்று ஊரவர்கள் அரசாங்கத்தையும் ஐக்கியசங்கப் பகுதியாரையும் நோக்கிக் கூவுகின்றனர்.

ஐக்கியசங்கக் கடைகளை விட, ஏனைய வியாபாரிகள் இப்படியாக மூடைகளிற் குறைவு இருப்பது என்று இற்றைவரை குறை கூறவில்லை என்று ஸ்ரீமாந். ஸ்ரீகாந்த அவர்கள் ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ

**புதன் ஆகஸ்ட் 21**

காலை 7.15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 திருச்சேறை ஏர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 சித்ரகானம் இசைத்தட்டு 8.30 சமயபுரம் கே நாராணசாமி பாட்டு 9 முடிவு.

1 மதியம் 1.20 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 சமயபுரம் கே நாராயணசாமி பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 சமயபுரம் கே சாராயணசாமி பிள்ளை பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 சாவித்திரி கணேசன் பாட்டு 5.50 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7.15 வானொலி வாத்ய கோஷ்டி 7-30 தமிழில் செய்திகள் 7.45 பத்ரிக விமர்சனம் 8 திருச்சேறை ஆர் கிருஷ்ண மூர்த்தி பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கீதம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கிலச்செய்தி 10 நீங்கள் கேட்டவை 10.20 ஒலிபரப்பு முடிவு.

**வியாழன் ஆகஸ்ட் 22**

காலை: 7.15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 டி எம் மாணிக்க பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 சித்ரகானம் 8.30 வி என் கிருஷ்ண மூர்த்தி ஐயர் வீணை 9 முடிவு.

1 மதியம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வி என் கிருஷ்ண மூர்த்தி ஐயர் வீணை 2 தமிழில் செய்திகள் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 கும்பகோணம் என் ஆர் ஸ்ரீநிவாச ஐயங்கார் பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி எம் மாணிக்க பாகவதர் பாட்டு 7.15 இலக்கிய வாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 கும்பகோணம் பானுமதி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஓர் இரவில் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10.30 முடிவு.

**வெள்ளி ஆகஸ்ட் 23**

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 காரைக்கால் எஸ் சுந்தரகாமாட்சி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 ஆந்தகுடி ஆர் ராமமூர்த்தி பாட்டு 9 முடிவு

1 மதியம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 அந்தகுடி ஆர் ராமமூர்த்தி பாட்டு 2 தமிழில்செய்திகள் 2 05 அந்தகுடி ஆர் ராமமூர்த்தி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 3 முடிவு.

மாலை: 5 திருப்பாம்புரம் சோமசுந்தரம் பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 5-40 தேவாரகனே 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 மெய் விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-15 திருப்பாம்புரம் சோமசுந்தரர் சகோதரர் நகஸ்வரம் 8.30 காரைக்கால் எஸ் காமாட்சி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 கே ஜே ஜோஸ் தில்ருபா 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9. 5 உலக விவகாரங்கள் 10-30 முடிவு.

## பன்னக் கைத்தொழில்

3-ம் பக்கத் தொடர்ச்சி

பன்னத்தொழில் பண வருவாய்க்குரியதன்றென அனேகர் தவருக நினைக்கிருர்கள். இலகுவான முறையில் பிற நாட்டினரும் விரும்பத்தக்கவாறு அழகாகப் பன்ன அறியாமையே இதற்குக் காரணமாகும். கழுத்துறையிற் பயிற்சி பெற்ற நம் மாணவிகள் மாதம் நாற்பது ஐம்பது ரூபாவிற்குமேற் பெறுமதியுள்ள பொருள்கள் செய்கின்றனர். இப்பொழுது நம் நாட்டிற் செய்யப்படும் பன்னப் பொருள்கள் நம்நாட்டுத்தேவைக்கே போதியனவல்ல, பிற நாடுகளுக்கும் அனுப்பக்கூடிய அளவு பெருந்தொகையாகச் செய்யப்பட்டாற்றான் அதிக ஆதாயம் பெறமுடியும். கழுத்துறை பாடசாலை வேலை நிலையம் 1945-ம் ஆண்டு 285042 ரூபாவுக்கும் 1946ம் ஆண்டு தை மாசி மாதங்களில் 36336 ரூபாவுக்கும் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா முதலிய நாடுகளுக்குப் பொருள் விற்றிருக்கின்றது. பனையோலை நிறைந்த நம்நாட்டு மக்கள் விழிப்படைவாராயின் பல இலட்ச ரூபா பெறுமதியான பொருள்களைப் பிற நாடுகளுக்கனுப்பி விற்பனை செய்யமுடியும். தொழிலின்றித் தவிக்கும் ஏழை மக்கள் பலர் தொழிலாளருமாகுவர்.

இவ்வேலை நிலையத்தில் 18 மாதம் வேலை செய்தவர்கள் 21 வயது நிரம்பியவராயும் தமிழ் ஏழாம் வகுப்புக்கு மேற் சித்தியெய்தியவராயுமிருப்பின் இப்பொழுது நீர்கொழும்பைச் சேர்ந்த கிறிமற்றியானவிலுள்ள பன்னக் கைத்தொழில் ஆசிரிய பயிற்சிச்சாலைக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

வருங்காலத்தில் நம்நாடு தொழிற் கல்வியில் அதிக முன்னேற்றமடையும். பன்னத்தொழிலும் பெரிதும் விருத்தியுறும் ஆதலின் முன்னதாகவே இத்தொழிலிற் பயிற்சி பெறவிரும்புவோர் மேற்கூறிய பன்னவேலை நிலையத்தில் உடனே சேருதல் இன்றியமையாதது. மற்றும் விபரங்கள் மனேஜரிடம் நேரில் அல்லது எழுத்து மூலம் அறிந்துகொள்ளலாம்


# திருமண அழைப்பு

மணமக்கள்:

திருவளர் செல்வன்: சரவணமுத்து - **முத்தையா** அவர்கள்

திருவளர் செல்வி: செல்வத்துரை - **மீனும்பாள்**

நாள் - முகூர்த்தம்:

**விய - ஆவணி - ௧௨ புதன் (29-8-46)**

பின்னிரவு 5-18 க்கு மேல்வரும் சிங்கலக்கின மங்கலவேளை.

இடம்:

மணமகளில்லம் (கந்தமடம் பெரியகந்தையா வைத்தியர் வளவு)

அழைப்பு:

உறவினர்களையும் நண்பர்களையும் இத்திருமண விழாவுக்குச் சமுகமளிக்குமாறு பேரிதும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,

'கந்தையா வைத்தியர் வளவு'
கந்தமடம்,
12—8—46.

ஏ. சி இராசையா வைத்தியரும்
பாரியாரும்.

குறிப்பு: பிரத்தியேக அழைப்பு அனுப்பப்படவில்லை.

30-8-46 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மணமகளில்லத்தில் விசேட சங்கீதக்கச்சேரி நடைபெறும்.

Mis 14420, 238


பன்னிரண்டு வயசுதாலும் நிரம்பாத சிறுவனுக்குச்

## சபிண்டீகரணஞ்செய்யலாமா?

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

செய்யவருகின்ற சம்ஸ்காராந்தம் பிண்டச்
செழுங்கிரியை யந்தஞ் சஞ்சயனாந்தஞ்
சேர்ந்த
மையலறுமே கோதிட்டத்தினந்தநன்மை
பருவு சபிண்டீகரணத் தந்தமென்று
பருவம்
ஐபமறு சௌளத்தின் முன் கனனவாகு
மைந்து வயசினுக்குமுன் பிண்டப் பிர
தானம் மேற்
தய்யவெட்டி னுள்ளத்திரு பறுக்கலீரா
றுட்
சொல்லே கோதிட்டமதின்மேற் சபிண்
டீகரணம்.

(இ—ள்): 1 சம்ஸ்காராந்தம்; 2, பிண்டப் பிதாநந்தம்; 3 சஞ்சயனாந்தம்; 4. ஏகோதிட்டாந்தம்; 5 சபிண்டீகரணாந்தம் என்பவை மேற்கூறிய ஐவகைச்சுத்தியாம்

மூன்று வயசிற்கு முன் கனனமும் (புதைத்தல்) ஐந்துவயசின்முன் பிண்டப் பிரதானமும் அதன்மேல் எட்டு வயசினுள் சஞ்சயனமும் (காடாற்றல்) அதன்மேல பன்னிரண்டு வயசினுள் ஏகோதிட்டமும் அதன்மேல் சபிண்டீகரணமும் என அவ்வக் கிரியைகளுக்குரிய காலவெல்லை வகுக்கப்படும்.

சபிண்டீகரணாந்தமான சுத்தி புத்திரருக்கே உரித்தாகலின், முறையே யடுத்துமிரண்டாங் கருத்தாராவார்க்கு நால்வகைச் சுத்தியே கொள்ளப்படும், பன்னிரண்டு வயசுக்கு மேற் சபிண்டீகரணத்துக்குரிய அதிகாரி இறந்தாலும் இரண்டாங் கருத்தரே கிரியைசெய்ய வேண்டியிருத்தலின், அவருக்கு ஏகோதிட்டம் வரையான நான்கு சுத்திகளே கொள்ளப்படும் [எனவே ஏகோதிட்ட விதான சபிண்டீகரணஞ் செய்ய வேண்டுமென்பதாம்

"உண்மைதேறு பிரதானன் புத்திரனொழிந்தோ ரெல்லாஞ் சேரிரண்டாம் பிரதானரென வறிக" என்னும் பிரமாணத்தினால் புத்திரனே பிரதான கர்த்தா, ஏனையவர்கள் இரண்டாம் பிரதான கர்த்தர்களென்பதையும் அறிக.

இன்னாரின்னாருக்கு ஏகோதிட்ட விதான சபிண்டீகரணஞ் செய்யவேண்டுமென்பதை யறிக:-

'மைந்தனில்லாப் புருடனுக்கு மனைவிக்
கும் பெருமை
மன்னு குரவன்றனக்குந் தம்பிக்குமன்பு
நந்த தோழன் றனக்குங் கத்தனுக்குஞ்
சிறந்த
சகோதரிக்கும் புதல்வனுக்குநன்மாமன்
றனக்கும்
நந்தலிலா வேகோதிட்டம் மாகச்செய்க
நலந்தரு சீர்ப்பாருவண நயந்து செய்
யாதொழிக.

(இ-ள்): புத்திரனில்லாத புருடனுக்கும் மனைவிக்கும் குருவுக்கும் தம்பிக்கும் தோழனுக்கும் எசமானனுக்கும் சகோதரிக்கும் புத்திரனுக்கும் தாய்மாமனுக்கும் கிரியை செய்யும்போது ஏகோதிட்ட விதானமாகவே சபிண்டீகரணஞ் செய்க பார்வண விதானமான சபிண்டீகரணத்தைச் செய்யலாகாது என்பதாம்.

ஏகோதிட்ட விதான சபிண்டீகரணஞ் செய்யுங் காலத்திலே பிண்டமிடும் வகையைச் சமயம் வாய்த்தபோது காட்டுவாம்.

இவ்வுண்மைகளொன்றையும் ஆராய்வு செய்யாது, ஏகோதிட்டம் மாத்திரஞ் செய்யவேண்டிய (12) வயசுடைச் சிறுவனுக்கு பிதா, பேரன், பீட்டன் இவர்களுக்கு இடவேண்டிய பிண்டத்தையும் இவர்களையுத்தேசித்து மூன்று பேர்களை வரித்துத் தானங்கள் கொடுப்பதும் முறையா?

சாஸ்திர விற்பன்னர்களே யோசியுங்கள்

## பெற்றூர் ஆசிரியர் விழா

சாவகச்சேரி சத்தியம்மன் பெண்பாடசாலையில் 10.8.46 சனிக்கிழமை பிற்பகல் ஆறு மணியளவில் ஸ்ரீமான் சு. இராசரத்தினம் அவர்கள் தலைமையில்ஷைவிழா நடந்தேறியது பாடசாலை மாணவர்கள் நடனம், உபந்நியாசம் சங்கீதம், நாடகம் முதலியவற்றில் தங்கள் திறமைகளைக் காட்டி ஆனந்தமடையச் செய்தனர். பின் அப்பாடசாலைத் தலைமை யாசிரியையாகிய ஸ்ரீமதி ஐ மீனம்மா அவர்கள், தாமும் உதவியாசிரியர்களும் ஷை பாடசாலையில் வேலைசெய்யத் தொடங்கிய காலமுதல் இன்று வரையும் பாடசாலை வளர்ச்சிக்குச் செய்த பணிகளையும் பெற்றோர் செய்த உதவிகளையும் அறிக்கைப்பத்திர வாயிலாக வெளிப்படுத்தினர் பின் திருவாளர் S. இராசசுந்தரம் B A. C. வித்தியாதரிசியவர்கள் பாடசாலையும் சுற்றாடலும் என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினர் பின் ஷை பாடசாலை ஆசிரியராகிய திரு. சிவபாதசுந்தரம் ஆசிரியருடன் ஒத்துழைக்கும் முறைகளையும் அதனால் பாடசாலை வளர்ச்சிக்கு வரும் நன்மைகளைப்பற்றியும் ஓர் உபந்நியாசஞ் செய்தனர். பின்பு ஸ்ரீமான சு இராசரத்தினமவர்கள் ஷை பாடசாலையை அரசினரின் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக்க அடைந்துள்ள கஷ்டங்களையும், ஷை பாடசாலைத் தலைமையாசிரியை ஐ. மீனம்மா அவர்கள் பிரதிஉபகாரம் கருதாமல் செய்த அரும் பணிகளையும் சபையோர் யாவருக்கும் கூறினர். பெற்றூர் ஆசிரியர் விழா இரவு பத்து மணியளவில் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

—நிருபர்.

# ஆறெழுத்தந்தாதி

( சோம. சரவணபவன் )

13-8-46-ல் வெளிவந்த இந்துசாதனத்திலே ஆறெழுத்தந்தாதி என்னும் நூலொன்றைப்பற்றி ஸ்ரீமான். மு. இராசரத்தினம் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையைக் கண்டோம். அவருக்கும் பிறருக்கும் பயன்படுமென்றெண்ணி அந் நூலைப்பற்றி நமக்குத் தெரிந்த விபரம் சிலவற்றை ஈண்டு வரைகின்றோம்.

சில மாதங்களுக்கு முன்பு "ஆறெழுத்தந்தாதி" என்னுமொரு நூலைப் பார்க்கும் பேறு நமக்குக் கிடைக்கலாயிற்று. அதனை இயற்றியவர் அகத்திய முனிவரென்றும், அது சடாக்ஷர அந்தாதி எனவும் வழங்கப்படும் என்றும். அந்நூல் முகப்பிலும் முகவுரையிலும் கூறப்பட்டிருத்தல் கண்டோம் அதற்குப் பதவுரையும் விருத்தியுரையும் இயற்றியவர் "திருச்சுழியல்வக்கீல்முத்துக்கருப்பண்ணபிள்ளையவர்கள் குமாரரும், ஆஸ்திகமத சித்தாந்த அவதானியும், பன்னூலாசிரியருமான வித்துவான் M. வீரவேற்பிள்ளையவர்கள்" என்று முகப்பிலே பொறிக்கப்பட்டுள்ளது. நாம் கண்ட அப்பிரதி 1940-ம் ஆண்டு சென்னை வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்திலே பதிப்பிக்கப்பட்டதாகும். கொழும்பிலே செட்டியார் தெருவிலுள்ள சரஸ்வதி புத்தகசாலையின் இறப்பர் முத்திரை பொறித்திருத்தலினாலே, இந்நூல் அவ்விடத்தில் விற்பனைக்கு உண்டு என்பது புலனாகின்றது.

"கற்பகமி ருக்கத்தன் கந்தமிகு
நந்தவனப்
பொற்பகமி ருக்கப் பொதிகைமுனி
—நற்கரகத்
தண்ணீரை யாதரித்த ஐந்துகரன்
காப்பாமெம்
மெண்ணீரை யாறெழுத்திற் கே"
என்பது காப்புச் செய்யுள்.
"ஆறு முகமுண்டு பன்னிரு
தோளுமுண் டங்கையினி
லேறிய வேலுண்டு வெற்றி மயூர
முண் டேவல் செய்ய
மீறிய சிங்கத்துரை வீரவாகுண்டு
வேலைக் சிங்கே
கூறிய போது வருவான் குமர
குருபரனே"
என்பது முருகன் துதி

இவையிரண்டும் புறநீங்கலாக, நூல் 102 (நூற்றிரண்டு)செய்யுளால் இயங்குகின்றது.

சட்டுரையாளர் நான்காவது செய்யுள் தொடங்கி ஒன்பதாவது செய்யுள் வரையுமுள்ளனவாக எடுத்துக் காட்டிய பாக்கள் அத்தனையும் நூலிலே முதல் ஆறுபாக்களாய் ஒழுங்களாக அமைந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### ஜின்னாவின் மறுப்பு

பண்டிதர் ஜவஹர்லால் நேரு ஜின்னாவைக் கண்டார், நிலைமையை விளக்கினார். நாட்டின் நன்மையை முன்னிட்டு கேவலம் அற்பத்தனத்தை விடுத்து ஒத்துழைத்து இடைக்கால அரசாங்கத்திற் பங்கு பற்றும்படி கேட்டார். ஜின்னா மறுத்துவிட்டார். எனவே, இனி நடப்பது என்ன? ஜின்னா மறுத்துவிட்டதால், இடைக்கால அரசாங்கம் அமைக்கும் வேலையை நேரு விடுவதற்கில்லை. தேசிய முஸ்லீம்கள், சீக்கியர் முதலியோருடன் ஒத்துழைப்புடன் அந்த அரசாங்கத்தை நிறுவுவதென்றே அவர் கங்கணம் கட்டிவிட்டார்.

●

### சீக்கியர் ஒத்துழைப்பர்

பிரிட்டிஷ் மந்திரசபையினர் தயாரித்த நீண்டகாலத்திட்டத்திற்கொண்டுள்ள அதிருப்தி காரணமாக, அத்திட்டத்தைப் பகிஷ்கரித்த சீக்கியர், காங்கிரஸ் காரிய நிர்வாகசபை கேட்டுக்கொண்டதற் கிணங்க, நீண்டகாலத்திட்டத்தில் ஒத்துழைக்க முன்வந்துவிட்டார்கள் சிறுபான்மையினர் விஷயத்தில் காங்கிரஸ் மிகவும் தாராள மனப்பான்மையுடன் நடக்கும் என்ற பூரணமான நம்பிக்கை முஸ்லீம் லீக் ஒன்றைவிட மற்ற எல்லாச் சிறுபான்மையினர்க்கும் உண்டு.

●

### முஸ்லீம் லீக்கினர் காடைத்தனம்

நாம் எல்லாரும் எதிர் பார்த்தபடி, முஸ்லிம் லீக்கினர் தம் காடைத்தனத்தைக் காட்டிவிட்டனர். சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்த நேரடிப் போராட்ட தினத்தன்று, தாங்கள் எவ்வளவு தூரம் காடைத்தனத்திற்குச் செல்லக்கூடும் என்பதை ஜின்னாவின் மதவெறி படைத்த லீக்கர்கள் வங்காளத்தில் இன்று முஸ்லிம் லீக் பரிபாலனம் செய்கிறது. இந்த முஸ் உலகத்துக்குக் காட்டி விட்டனர். லிம் லீக் அரசாங்கமே காடையர்க்கு உற்சாகம் சாட்டித் தூண்டி விட்டதால் அங்கே கலகம் நிகழ்ந்து 300 பேர் வரை மரணம் அடைந்தனர் 2000 பேர் வரை காயமுற்றனர். லீக் காடையர், அமிர்த பஸார் பத்திரிகைக் காரியாலயத்துக்கும் கல்லெறிந்தார்கள் பிரபல காங்கிரஸ் வாதியும், முன்னர் கல்கத்தா மேயராயிருந்தவருமான டக்டர் பிதன் சந்திரராய் அவர்களின் வீட்டுக்கு இந்தக் காடையர் கல்லெறிந்து அதற்கு நெருப்பு மூட்டவும் முயற்சித்தனராம். இறந்தவர்களில் எத்தனை பேர் முஸ்லீம்கள், எத்தனைபேர் ஹிந்துக்கள் என்பது தெரியவில்லை. இறந்தவர்களில் வங்காளச் சட்டசபையில் காங்கிரஸ் கட்சித் தலைவரான ஸ்ரீ ஜுத் கிரன்-சங்கரராய் அவர்களின் புத்திரரும் ஒருவராவர் என்று இப்போது தெரிகிறது. நிலைமை இன்னும் தெளிவடையவில்லை.

●

### இறங்கவும் வேண்டுந்தான்

பாரதநாடு 40 கோடி மக்களைக் கொண்டது. சுதந்திரம் என்பது இரத்தம் சிந்தாமல் வரப்போவதில்லை. நாற்பது கோடியில் ஒரு கோடி மக்கள் இறந்தாலும் காரியமில்லை. எனவே, இப்படியான அற்பக் காடைத் தனத்தால் விரசிங்கமான ஜவஹர்லால் நேருவோ, காங்கிரஸ் தலைவர்களோ, பிரிட்டிஷ் அரசாங்கமோ பணிந்துவிடப் போவதில்லை. விமானத்திலிருந்து பொழிந்த குண்டுகளுக் கஞ்சாத காங்கிரஸ் வீரர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பீரங்கிக் குண்டுகளுக் கஞ்சாது போர் புரிந்த வீர புருஷர். முஸ்லிம் லீக் காடையரின் பேனைக் கத்திகளுக்கும், குண்டாந் தடிகளுக்கும் அஞ்சப் போவதில்லையென்பதை ஜின்னா சாய்பு இதுவரை உணர்ந்திருப்பார். லீக்கினர் செய்த காடைத்தனத்தை அகில உலகமும் வெறுக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் அருவருக்கிறது. இந்திய மக்கள் ஏகோபித்து ஆத்திரப்படுகின்றனர். இந்த நிலைமையில், பண்டிதர் நேரு இராஜப்பிரதி வேவலுடன் சம்பாஷணை நிகழ்த்தி, அரசாங்கம் அமைப்பதற்கான கருமங்களை மிகவும் ஜரூராகச் செய்து வருகிறார் "நாங்கள் மத்திய அரசாங்கத்தை அமைப்போம்: அரசாங்கம் திறமை வாய்ந்ததொன்றானால், காடையர் கொட்டம் அடங்கும்; திறமையற்ற அரசாங்கமாயின் அந்த அரசாங்கமே கவிழட்டும்" என்று பண்டிதர் நேரு கூறியதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

●

### ஓடித்திரிகிறார்கள்

வங்காளத்தில் உள்ள முஸ்லிம்லீக் மந்திரசபையினர் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் பங்கில் வேலைசெய்கிறார்கள். கலகத்தைத் தூண்டிவிட்டு, இப்போது கலகத்தை அடக்க எல்லாரது உதவியையும் நாடுகிறார்கள். வங்காளத்தில் கல்கத்தா நகரத்தில்தான் இந்தக் காடைத்தனம் நிகழ்ந்ததேயன்றி, இந்தியாவின் மற்றும்மாகாணங்களில் சென்ற வெள்ளிக்கிழமை இப்படியானசெயல்கள் நடந்ததாகத் தெரியவில்லை. வங்காளத்திலே முஸ்லிம் லீக்கர் மந்திரசபையில் இருந்ததால்தான் இந்த அநியாயம் அங்கே நிகழ்ந்தது

●

### பிந்திய செய்தி

கல்கத்தாவில் முஸ்லிம்லீக் நிகழ்த்திய நேரடிப் போராட்டத்தின் விளைவாக இற்றைவரை 3000 பேர் இறந்துவிட்டார் என்று தெரிகிறது.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

தோன்றல்வந் திடலும் விண்பாற் துந்துமி கறங்க லுற்ற
ஆன்றதொன் மறைக ளெல்லா மார்த்தன அயனு மாலும்
வான்றிகழ் மகத்தின் றேவு முனிவரு மலர்கள் தூவி
யேன்றெமை யருளு கென்றே யெத்திசை யெடுத்துச் சூழ்ந்தார்.

(இங்ஙனம்) குமாரக் கடவுள் தோன்றியருளுதலும், தேவதுந்துமி (தாமே)யொலித்தன: பெருமை வாய்ந்த தொன்மையான வேதங்கள் நான்கும் (தாமாகவே) ஆரவாரித்தன; பிரமாவும் திருமாலும் விண்ணுலகில் விளங்கிய இந்திரனும் முனிவர்களும் பூக்களைப் பரக்கச் சொரிந்து ஒருங்குகூடி முந்தியே எங்களைக் காத்தருள வேண்டுமென்று தோத்திரஞ் செய்துகொண்டு சூழ்ந்தார்களென்பது கருத்து,

தோன்றலென்னுஞ் சொல் புதல்வனைக் குறித்து நின்றதெனினும், அடியார்க்கு நேரும் இடுக்கணைத் தீர்த்தருளும் வண்ணம் வேண்டிய வேண்டிய காலத்திலே தோன்றியருளும் பெருமானென்பதையும் உணர்த்துவான் வேண்டி ஆசாரிய சுவாமிகள் அக்கருத்துக் கொண்ட ஏனைய சொற்களைப் பிரயோகித்தலின்றி இங்கே தோன்றல் என்றாரென்க. தோன்றல் எப்பொழுது தோன்றுவரென்பதை முந்தியே எதிர்பார்த்து அரியயன் மகவான் முதலாந் தேவரும் முனிவரும் பெருமான் றோன்றிய மாத்திரத்தே காலதாமசமின்றி மலர்கள் தூவி எத்திசையெடுத்துச் சூழ்ந்தாரென்னும் விரைவு நிகழ்ச்சியைக் குறிப்பாலுணர்த்துவார் "தோன்றல் வந்திடலும்..." என்றார் தீபடுதலுஞ் சுட்டது என்றாற்போல; அதாவது தோன்றல் வந்திடுதலுக்கும் தேவர் முனிவர் மலர்கள் தூவி எத்திசையெடுத்துச் சூழ்ந்தமைக்கும் கணப்போதேனும் இடையீடில்லை யென்பதாம்; அயனும் மாலும் மகத்தின் தேவுமெனக் கூறப்பட்டிருப்பினும் உப இலக்கணத்தால் ஏனைய தேவர்களையுங் கொள்க; முனிவர்கள் தேவரைக் காட்டிலும் மேம்பட்டவராக, முனிவரை முன்வைத்துக் கூறாது தேவரை வைத்துக் கூறியதென்னையெனின், முனிவர்களைக்காட்டிலும் அரிபிரமேந்திராதி தேவர்களே சூரன் முதலிய அசுரர்களால் அதிக இன்னற்பட்டாராய், அவ்வின்னலிலிருந்து தப்பி ஈடேறவேண்டுமெனப் பெருமானை இரந்துநின்றவராதலினென்க. வேதவொழுக்கம் நிகழுமென்பதற் கறிகுறியாக மறைகள் ஓதுவாரின்றித் தாமே யார்த்தன; இங்கே மறைகளென்றது மறைகளுக்குரிய அதிதேவதைகளை; வான்றிகழ் மகத்தின் றேவும் என்பதில், அச்சமயத்தில் இந்திரன் வானுலகிற் றிகழ்ந்திலனாதலின் வான்றிகழென்பதை மகத்தின்றேவுக்குஇயற்கையடையாகக் கொள்க; ஏன்று என்பதில் ஏல என்னும் பகுதி முன்னம் பொருந்த என்னும் பொருள்கொண்டது: எனவே ஏன்று என்பதற்கு இங்கே சூரபன்மனால் இன்னமும் எங்கட்கு இடர் நேருமுன்னர் எனப் பொருள்கோடலே ஏற்புடைத்தாம்; இங்ஙனமின்றி ஏலுதல் பொருந்துதலெனப் பொருள்கோடல் பொருந்தாதென்க.

[மங்கலம் நிகழ்ந்தக்கால் ஆகாயத்திலே தேவதுந்துமிகள் படுப்பவரொருவருமின்றித் தாமே யொலிக்குமென்க சூரனுதியசுரரால் வருந்தினமையின் 'ஐயா, மிகவும் அலுத்தோம், உலுத்தோம்; ஆதலிற் காலதாமசஞ் செய்யாது முற்பட்டுக் காத்தருள்க" என்பார் ஏன்றெமை யருளுமென்றார் என்க.]

(93)


# திருப்புகழ் பஜனை

தென்கன்னடம் ஜில்லா, கஞ்சர் காடு ஆனந்தாச்ரமத்தைச் சேர்ந்தவரும்
சென்ற சித்திரைமாதம், திருவாங்கூர் பிரதம நீதிபரசர்
திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசுவாமி ஐயர்
அவர்களுடன் வந்து, முருகன் அருள்கண்ட பக்திவள்ளல்
அருணகிரிநாதரின் திருப்புகழ் முதலாம் அருட்பாக்களைப்
பாராயணம் செய்தவருமான

## ஸ்ரீ முருகதாஸ் அவர்கள்

வெள்ளவத்தை இசைக்கலாமன்றத்து ஆதரவில் நடத்தப்
படும் இசைக்கல்லூரியில் தாம் பயிற்றும் மாணவிகளுடன்,
சங்கீதப்பிரியர் சமயாபிமானிகளின் வேண்டுகோளுக் கிணங்கி

நமது யாழ்ப்பாணத்திற் சில இடங்களில்
திருப்புகழ் பஜனை செய்வார்.

நிகழும் ஆகஸ்டுமாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை
மாலை 6 மணிக்கு

ஸ்ரீ முருகதாஸ் அவர்கள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில்

## முருகன் பெருமை

என்னும் விஷயமாக ஓர் கர்ணாமிர்த பிரசங்கம்
பக்கவாத்திய சகிதமாக நிகழ்த்துவார்கள்.

அனைவரும் வருக! அன்பு பெருக!
அறுமுகத் தெந்தையின் அருள்மல்க!

(Mis 156 20)



# ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் சென்றல் கொலீச்சில் அதிபராயிருந்த J. W. அருட்பிரகாசம் அவர்களின் வீட்டுத் தளபாடங்களும் சப்பல் பியானோ வயலெஸ் செற் ஆர்மோனியமும் இன்னும் பலவித வீட்டுத் தளபாடங்களும் யாழ்ப்பாணம் 1-ம் குறுக்குத் தெரு 21 ம் நம்பர் வீட்டில் (ஆஸ்பத்திரி றோட் சந்திக்கருகாமையில்) 1946-ம் ஆண்டு ஆவணி மாதம் 21 ந் திகதி புதன்கிழமை, பி. ப. 4 மணிக்கு விற்கப்பெறும்.

கோணாமலை ஐயாத்துரை,
ஆக்சனியர்

Mis 157 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு நல்விருந்து

இப்போது வெளிவந்துவிட்டது :: விரைவில் வாங்குங்கள்

## சரித்திரபாடம்

ஐந்தாம் வகுப்புக்குரியது.

ஆக்கியோன் ச. ஜெயவீரசிங்கம் B. A. Hons.

சரித்திர ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

இப்புத்தகத்தை நீங்கள் ஆதரிக்கவேண்டியதற்கு நியாயங்களாவன:

1. வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக் கமையும்படி இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.
2. இப்புத்தகத்தில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினுக்களும் இருக்கின்றன.
3 உண்மையானசரித்திரமன்றிக்கட்டுக்கதைகள்சேர்க்கப்பட்டுள்ளன
4. இப்புத்தகம் இலகுவான நடையி லெழுதப்பட் டிருக்கிறது.
5 இப்புத்தகம் வித்தியாதிகாரியின் அங்கீகாரம் பெற்றுள்ளது.
6. இப் புத்தகத்திற்காணும் சிலபாடங்கள் ஐந்தாம் வகுப்புக்கு என்று எழுதிய வேறுபுத்தகங்களில் இல்லை.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிக ளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

ஒரு புத்தகத்தின் விலை ரூபா 1. 50 சதம்.

(Mis 126 6, 13, 20)



## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப் படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற் கால நிலைமைக்கும், தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச செய்யப்பட்டு இக்காலத்தில் அதிக மாய் உபயோகிக்கப் டுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவை களே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில் ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்

(Misc. 250—19-3-46—19-9-46) (செ) 1888-ம் ஆண்டு முதல்.



## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிதூரல் சூடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும் கருவை அழியாமல் காக்கும் பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

கால் ருத்தல் விலை ரூபா 5-00

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 27 26-4—25-10 (செ)



## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)


## இந்தியாவுக்குப் பார்சல்கள்

தென்னிந்திய புகைரதப்பகுதி வேலை நிறுத்தம் நடக்கும்போ விருப்பதை முன்னிட்டு இந்தியாவுக்குப் புகைரத மார்க்கமாக அனுப்ப பார்சல்கள் மறு உத்தரவு வரும்வரை அங்கீகரிக்கப்பட மாட்டா வென்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கிறது,

## பெட்ரோல் விலை அதிகரிப்பு

பெட்ரோலின் விலையில் 5 சதமும் மண்ணெண்ணெயின் விலையில் மூன்று சதமும் கூட்டப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது





எங்கும் கியாதிபெற்ற எமது

ரேடியோ பீடிகளையே

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எல்லாஊர்களிலும் கிடைக்கும்

மொடேண் ஏஜென்சீஸ்,

சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம் ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

அயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,

91, முதலாம் குறுக்குத்தெரு,

புறக்கோட்டை, கொழும்பு

Mis 154 29-11-45—30-11(தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday August 20, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org